ஓம் ஶ்ரீ அகத்தியர் துணை

சத்தியமே அகத்தியம்! அகத்தியமே ஜெயம்!!

# ஞானிகள்
# அருளிய
# நெறிமுறைகள்

பரமானந்த சதாசிவ சற்குரு
தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகள்,
நிறுவனர்,
ஶ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம்,
ஓங்காரக்குடில்,
துறையூர் – 621 010, திருச்சி மாவட்டம்.

ஓம் ஶ்ரீ அகத்தியர் துணை

அருட்பெருஞ்ஜோதி! அருட்பெருஞ்ஜோதி!!

தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்ஜோதி!!

# ஞானிகள்
# அருளிய
# நெறிமுறைகள்

பரமானந்த சதாசிவ சற்குரு
தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகள்

ஆடாதீர் சற்றும் அசையாதீர் வேறொன்றை
நாடாதீர் பொய்யுலகை நம்பாதீர் வாடாதீர்
சன்மார்க்க சங்கத்தைச் சார்வீர் விரைந்து இனி இங்கு
என் மார்க்கமும் ஒன்றாமே.

திருஅருட்பா – சுத்த சிவநிலை – 41.

## தமிழைக் கற்றால் வரும் நன்மைகள்

- தமிழைக்கற்றவன் பாவ புண்ணியம் அறிவான்.
- தமிழைக்கற்றவன் ஞானி ஆவான்.
- தமிழைக்கற்றவன் கடவுள் ஆவான்.
- தமிழைக்கற்றவன் வாலை பூஜை செய்வான்.
- தமிழைக்கற்றவன் நாதவிந்துவை அறிவான்.
- தமிழைக்கற்றவன் பண்பாளன் ஆவான்.
- தமிழைக்கற்றவன் ஜீவான்மாவையும், பரமான்வையும் அறிவான்.
- தமிழைக்கற்றவன் இயற்கையை அறிவான்.
- தமிழைக்கற்றவன் சத்து சித்து ஆனந்தம் அறிவான்.
- தமிழைக்கற்றவன் உயிரையும், உடம்பையும் அறிவான்.
- தமிழைக்கற்றவன் தூல சூட்சுமத்தை அறிவான்.
- தமிழைக்கற்றவன் எல்லாம் கற்றவன் ஆவான்.
- தமிழைக்கற்றவன் தலைவன் ஆவான்.
- தமிழைக்கற்றவன் தமிழ்தான் உலகம் என்று அறிவான்.

## மனிதன் மேன்மை அடைய ஓங்காரக்குடிலாசான் அருளிய உபதேசம்

- **ஓம் அகத்தீசாய நம** என்று நாமஜெபம் செய்வதே தவமாகும்.
- உயிர்ப்பலி கொடாத பூஜையே உண்மையான பூஜையாகும்.
- மனிதநேயம் இல்லா ஆன்மிகம் மயானத்திற்கு ஒப்பானது.
- உயிரை அறிந்தவன் உடம்பை அறிவான்.
- ஜீவாத்மாவை அறிந்தவன் பரமாத்மவை அறிவான்.
- குணக்கேட்டை அறிந்தவனே குணப்பண்பாளன் ஆவான்.
- நாமே அதுவென்று அறிந்தவன், அதுவே நாம் என்று அறிவான்.
- பொருளின் தன்மையறிந்தவன் புண்ணியவான் ஆவான்.

- உண்மைப்பொருள் அறியாதவனே உயிரில்லாதவன் ஆவான்.
- இச்சை (ஆசை) உள்ளவனே அச்சமுடன் வாழ்வான்.
- சாக்காட்டை வென்றவனே சமத்தனாவான்.
- நீதியில்லாதவனே ஜாதியை வகுத்திட்டான்.
- சோம்பல் உள்ளவன் வெற்றி காணமாட்டான்.
- அளந்து செலவு செய்பவன் அறிவுடையவன் ஆவான்.
- விருந்தை உபசரிப்பவன் நட்புடன் வாழ்வான்.
- சந்நியாசம் செய்வதிலும் மூடர் உண்டு, சம்சாரம் செய்வதிலும் ஞானி உண்டு.
- பிறருக்கு செய்யும் உதவியே அறிவுடைமை ஆகும்.
- நல்லவன் என்பவனே வல்லவன் ஆவான்.
- முயற்சி உடையான் தளர்ச்சி அடையான்.
- உள்ளத் தூய்மையே சொல்லின் தூய்மையாகும்.
- பூஜை என்பதே புண்ணியமாகும்.
- உண்மை என்பதே அகத்தீசன் ஆகும்.
- மோட்சம் என்பதே அகத்தீசன் ஆவான்.
- ஒப்புரவாளனே உயர்ந்தவன் ஆவான்.
- வாழ்வை அறிந்தவன் தாழ்வு அடையான்.
- பகையில்லா வாழ்வு பண்பான வாழ்வு.
- சுயநலமில்லாதவனே பிறர்நலம் விரும்புவான்.
- பகுத்து உண்பதே பண்பதாகும்.
- அளந்து உண்பதே ஆரோக்கியமாகும்.
- பகைமை இல்லாத வாழ்வே தகைமையான வாழ்வு.
- பொறாமை இல்லாமையே புண்ணியமாகும்.
- கோபம் உள்ளவன் பாவியாவான்.
- புலனை வென்றவனே வீரனாவான்.
- காசாசை உள்ளவனுக்கு ஞானம் இல்லை. ஞானம் உள்ளவனுக்கு காசாசை இல்லை.
- அறம் கூறுகின்றவன் புறம் கூறான். புறம் கூறுகிறவன் அறம் கூறான்.

- லோபி என்பவனே பிறரை மதிப்பான். பிறரை மதியாதான் தன்னை மதிப்பான்.
- துறவு என்பதே உண்மையை அறிவதாகும். உண்மையை அறிவதே துறவாகும்.
- பொருளை கொண்டே அருளை பெறலாம். அருளை கொண்டே பொருளை பெறலாம்.
- புலால் உண்பவர்களிடம் ஜீவதயவு இருக்க முடியாது. ஜீவதயவு உள்ளவர்கள் புலால் உண்ணமாட்டார்கள்.
- மனிதநேயம் உள்ளவர்களிடம் சுயநலம் இருக்கமுடியாது. சுயநலம் உள்ளவர்களிடம் மனிதநேயம் இருக்கமுடியாது.
- ஜாதி துவேசம் உள்ளவர்களிடம் புண்ணியம் இருக்கமுடியாது. புண்ணியம் உள்ளவர்களிடம் ஜாதி துவேசம் இருக்கமுடியாது.
- மனைவியை மதித்து வாழ்பவன் குற்றத்தை மன்னிப்பான். குற்றத்தை மன்னிக்காதவன் மனைவியை மதிக்கமாட்டான்.
- மான உணர்ச்சி என்ற பெயரில் மனைவிமீது சந்தேகப்பட்டு அவரை மறைமுக சித்ரவதை செய்வார்கள். அவர்கள் எல்லாம் விலங்கினத்திற்கு ஒப்பாவார்கள்.
- ஒரு மனிதன் பாவியாவதற்கு பேராசையும், சந்தேகமும், பொறாமையும், வஞ்சனையும், வன்சொற்களுமாகும். இதை தவிர்த்தல் அவன் புண்ணியவான் ஆவான்.
- பெண்கள் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்வது சிறப்பறிவாகும். அவர்களை காவல் செய்து காப்பாற்றுவது பயனற்றதாகும்.
- உண்மை பக்தி இருக்கும் இடத்தில் ஆடம்பரம் இருக்காது. ஆடம்பரம் இருந்தால் அங்கு உண்மை பக்தி இருக்காது.

# மகான் ஆதிசங்கரர் அருளிய உபதேசங்கள்

மிகச்சிறந்த ஆபரணம் எது?

**நல்லொழுக்கம்.**

நரகத்திற்கு உள்ள ஒரே வாசல் எது?

**காம ஆசை.**

எவன் மூடன்?

**விவேகமற்றவன்.**

நம் எதிரிகள் யார்?

**நம் இந்திரியங்கள். இவற்றை நாம் வென்றுவிட்டால் இவற்றைப் போன்ற சிறந்த நண்பர்கள் வேறு கிடையாது.**

உலகை வென்றவன் யார்?

**எவன் தன் மனத்தை வென்றவனோ, அவன்.**

எவன் மிகச் சிறந்த வீரன்?

**எவன் காம பாணத்தினால் பீடிக்கப்படுவதில்லையோ, அவன்.**

மனிதர்களைப் பீடிக்கும் வியாதி என்ன?

**கவலை.**

எவன் ஏழை?

**எவனுடைய ஆசைக்கு அளவில்லையோ, அவன்.**

எவன் பணக்காரன்?

**கிடைத்ததைக் கொண்டு திருப்தி அடைகிறவன்.**

இரவும், பகலும் எதை ஞாபகம் வைத்துக் கொள்ளவேண்டும்?

**வாழ்க்கையின் நிலையாமையை.**

தாமரையிலைத் தண்ணீரைப்போல நிலையற்றது எது?

**யௌவனம் (இளமை அழகு) பொருள்.**

மரணம் சமீபித்ததும் புத்திசாலி என்ன செய்ய வேண்டும்?

**திரிகரண சுத்தியோடு ஞானிகளை பூஜை செய்யவேண்டும்.**

அருட்பெருஞ்ஜோதி! அருட்பெருஞ்ஜோதி!!
தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்ஜோதி!!

## ஏழைகளுக்கு பசியாற்றுவிப்பதால் ஏற்படுகின்ற நன்மைகள்

### நாம் புண்ணியவான் ஆவதற்கு,
## ஆசான் இராமலிங்கசுவாமிகள்
### அருளிய அருள் வாக்கு

- தங்கள் தங்கள் தரத்திற்கு தக்கபடி பசித்தவர்களுக்கு பசியாற்றுவிப்பதை விரதமாக அனுசரிப்பவர்களுக்கு சூலை, குன்மம், குஷ்டம் முதலிய தீராத வியாதிகள் நீங்கி விஷேச சௌக்கியம் உண்டாகும்.
- நல்ல அறிவுள்ள குழந்தைகள் பிறக்கும். தீர்க்க ஆயுளை உண்டு பண்ணும் என்பது உண்மை. மேலும், கல்வி அறிவு, செல்வம், குடும்பத்தில் மகிழ்ச்சி முதலியவைகள் உண்டாகும்.
- கோடையில் வெயிலும் வருத்தாது. மண்ணும் சூடு செய்யாது. பெருமழை, பெருங்காற்று, பெரும்பனி, பேரிடி, பெருநெருப்பு முதலியவைகளால் துன்பம் வராது.
- அம்மை, விஷசுரம், நோய்களை உண்டு பண்ணுகின்ற விஷக்காற்று முதலியவைகளால் கொடியநோய் உண்டாகாது.
- ஆற்று வெள்ளத்தாலும், திருடர்களாலும், பகைவர்களாலும் இடையூறு வராது.
- பொய் வழக்குகளாலும், துஷ்ட தேவதைகளாலும், துன்பம் வராது. நாம் செய்யும் விவசாயத்தில் நல்ல மகசூல் உண்டாகும்.
- வியாபாரத்தில் லாபமும், உத்தியோகத்தில் கெடுதியில்லாத மேன்மையும் உண்டாகும்.

- நல்ல பண்புள்ள நண்பர்களும், ஒத்தக் கருத்துள்ள உறவினர்களும், தகுதியுள்ள வேலையாட்களும் அமைந்து வாழ்க்கையில் அமைதி ஏற்படும்.
- புலி, சிங்கம், கரடி போன்ற கொடிய மிருகங்களாலும், விஷஜந்துக்களாலும் மற்றும் சிறுதெய்வங்களாலும் அச்சமில்லா வாழ்வு அமையும்.
- பிறர் பசி தீர்க்கக்கூடிய எண்ணம் உள்ளவர்களுக்கு எப்படிப்பட்ட விபத்துக்களும், இடையூறுகளும் சத்தியமாக வராது என்பது உண்மையாகும்.
- முன்செய்த தீவினையின் காரணமாக நமக்கு துன்பம் வர நேர்ந்தாலும் அத்துன்பம் நீங்கும்.

இராமலிங்க சுவாமிகள்.

## நமது வேதம் – திருக்குறள்

1. திருக்குறளை பார்த்தால் கடவுளை பார்த்தால் கடவுளை பார்த்ததாக அர்த்தம்.
2. திருக்குறளை தொட்டால் கடவுளின் திருவடிகளை தொட்டதாக அர்த்தம்.
3. திருக்குறளை படித்தால் கடவுளிடம் தொடர்பு கொண்டதாக அர்த்தம்.
4. திருக்குறள் படிப்பதை கேட்டால் கடவுளின் பெருமையை கேட்டதாக அர்த்தம்.
5. திருக்குறள் பரப்பிரம்ம சொரூபியான சிவபெருமானே இயற்றியதாகும்.
6. திருக்குறளில் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் தெளிவாக சொல்லியிருப்பதால் அதை பார்ப்பதும், தொடுவதும், படிப்பதும், படிக்க கேட்பதும் புண்ணிய செயல்களாகும்.
7. திருக்குறள் தெய்வத்தமிழில் சொல்லப் பட்டிருப்பதால் நமது பிள்ளைகளை தமிழை கற்க செய்ய வேண்டும்.
8. திருக்குறளைக் கற்றால் நமது பிள்ளைகள் கடவுள்தன்மை அடைவார்கள்.

**9.** அணுவைத் துளைத்தேழ் – கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்.

**–ஔவையார்.**

**10.** கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்.

**–இடைக்காடர்.**

## ஜென்மத்தைக் கடைத்தேற்ற வேண்டுமா?

ஜென்மத்தைக் கடைத்தேற்ற விரும்புகிறவர்கள்
இதைப் பின்பற்றலாம்.

திருவடி யேசிவ மாவது தேரில்
திருவடி யேசிவ லோகஞ் சிந்திக்கில்
திருவடி யேசெல் கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெனி வார்க்கே.

–திருமந்திரம் – 138.

ஓங்காரக்குடிலாசான்
பரமானந்த சதாசிவ சற்குரு
தவத்திரு. **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்**
அவர்களின் அருளுரை

ஜென்மத்தைக் கடைத்தேற்ற விரும்புகிறவர்கள், தினமும் **ஓம் அகத்தீசாய நம** என்று காலையில் 10 நிமிடமும், மாலையில் 10 நிமிடமும் நாமஜெபம் செய்ய வேண்டும். மற்றும் பொருள் சேர்க்கும் பொழுது பிறர் **பாவி** என்று சொல்லாமல் நடந்துகொள்ள வேண்டும். சிறந்த முயற்சி உள்ளவராக இருக்க வேண்டும். வரவுக்கு உட்பட்டு செலவு செய்ய கற்றுக்கொள்ள வேண்டும். மற்றவர்கள் மதிக்கவேண்டும் என்பத்காக ஆடம்பர வாழ்வை விரும்பக்கூடாது.

மேலும், எந்த வகையிலும் கடன்வாங்கி செய்யவேண்டும் என்ற எண்ணம் வரக்கூடாது. விருந்தை உபசரிக்க வேண்டும். விருந்தை உபசரிப்பதற்குக் காரணம் நட்பு பெருகும். நட்பை பெருக்குவதன் நோக்கம் நமக்கு நான்கு பேர் துணை வேண்டும். நட்புதான் நமது வாழ்க்கைக்கு மூலதனம். தகுதியுள்ள நட்பு அமையுமானால், அதுவே நமது வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையும்.

மேலும், மனைவியை மதித்து நடக்க வேண்டும். அப்போதுதான், விருந்தை உபசரிக்கவோ, அன்னதானம் செய்யவோ அவள் துணையாக இருப்பாள். மேலும், தாய் தந்தைக்கு நன்றியுள்ளவனாக நடந்துகொண்டால், அவர்கள் நம்மை மனமார வாழ்த்துவார்கள். அதுவே நமக்கு கடவுளின் அருளுக்கு பாத்திரமாகும்.

வீட்டில் உள்ளவர்களிடம் எந்த அளவிற்கு அன்பு காட்டுகின்றோமோ அந்த அளவிற்கு நாம் மேற்கொள்ளும் வியாபாரம் மற்றும் செயல்கபாடுகளுக்கு உறுதுணையாக இருப்பார்கள். வீட்டில் உள்ளவர்களின் மனம் நோகும்படி நடந்துகொண்டால் எந்த காரியத்திலும் வெற்றிபெற முடியாது. ஒருசிலர் வீட்டில் உள்ளவர்களிடம் கடுமையாக நடந்துகொண்டு, வெளியில் உள்ளவர்களிடம் இனிமையாக நடந்துகொள்வார்கள். முடிவில் வீட்டில் உள்ளவர்கள்தான் நம்மை பாராட்ட வேண்டுமே தவிர மற்றவர்களை பாராட்டுவதால் யாதொரு பயனும் இல்லை.

நம் வீட்டில் ஏதேனும் குறைகள் இருந்தால், அவன் செய்வினை செய்துவிட்டான், இவன் செய்வினை செய்துவிட்டான் என்று எண்ணாமல் நமது வினைப்பயன்தான் வந்துள்ள துன்பத்திற்கு காரணம் என்று எண்ணவேண்டும். மனைவி மீது கணவன் சந்தேகப்படுவதும், கணவன்மீது மனைவி

சந்தேகப்படுவதும் குடும்பத்தில் குழப்பம் ஏற்படும். மேலும் அமைதியும் கெட்டுவிடும்.

மாதம் இருவருக்கு அன்னதானம் செய்வதனால் பிறருக்கு கொடுக்கக்கூடிய மனம் உண்டாகும். கணவன் மனைவிக்குள் ஒற்றுமை உண்டாகும். செல்வம் பெருகும், உடல் ஆரோக்கியம் உண்டாகும். மேற்கொள்ளும் செயல்பாடுகள் தடையில்லாமல் நடக்கும். இதற்குமுன் அறியாமையால் பகை உருவாகி இருந்தாலும் பகை நீங்கி நட்பு உண்டாகும். அன்னதானம் செய்யச் செய்ய குடிப்பழக்கம், சூதாடும் பழக்கம், புலால் உண்ணும் பழக்கம், சிறுதெய்வங்களுக்கு உயிர்பலி கொடுக்கும் எண்ணங்கள் நீங்கிவிடும்.

ஜீவதயவு இருந்தால்தான் கடவுளின் அருள்பெற முடியும். ஜீவதயவு இல்லாத பூஜா அனுஷ்டானங்கள். மரப்பசுவில்(பொம்மை) பால் கறப்பதற்கு ஒப்பாகும்.

நம் பிள்ளைகளுக்கு பிறருக்கு உதவிசெய்ய வேண்டும் என்ற எண்ணத்தை சிறு வயதிலேயே போதிக்க வேண்டும்.

சிவபெருமானான வள்ளுவன் இயற்றிய திருக்குறளை தொட்டு வணங்கி படிக்கச்செய்ய வேண்டும். திருக்குறளை பார்த்தல், தொடுதல், படித்தல், படிக்கக் கேட்டல் அத்தனையும் கடவுளின் ஆசி பெறுவதற்கு துணையாக இருக்கும். திருக்குறளைப் படிக்கப் படிக்க முன்செய்த பாவங்கள் தீரும். பாவங்கள் தீரத்தீர அறியாமை நீங்கும். அறியாமை நீங்கினால் சிறப்பறிவு உண்டாகும். சிறப்பறிவு உள்ள மக்கள்தான் ஜீவகாருண்யத்தை கடைப்பிடிப்பார்கள். எனவே, திருக்குறளை படித்துவருகின்ற மக்களுக்கு நல்வினை பெருகும், ஞானமும் சித்திக்கும்.

மகத்துவம் பொருந்திய அகத்தியர் முனிவர் முற்றுபெற்ற முனிவர் ஆவார். **ஓம் அகத்தீசாய நம** என்று நாமஜெபம் செய்தால் நாம் செய்த பாவங்கள் எல்லாம் பொடிப்பொடியாகிவிடும். நாம் மேற்கொள்ளும் விவசாயம், வியாபாரம், தொழில், உத்தியோகம் தடையில்லாமல் நடக்கும். செல்வமும் பெருகும், தொட்டது துலங்கும், உடல் ஆரோக்கியமும் இருக்கும், பண்புள்ள புத்திரபாக்கியம் தோன்றும், கணவன் மனைவிக்குள் ஒற்றுமை உண்டாகும். ஆழ்ந்து சிந்திக்ககூடிய சிறப்பறிவு உண்டாகும். நமக்கு அமைந்த இந்த தேகம், இயற்கை கடவுளின் கருணை என்று எண்ணுகின்ற அறிவு உண்டாகும். நமது உடம்பில் உண்மையும் பொய்யுமாக கலந்துள்ளது. பொய்யை ஏன் சேர்த்து அமைத்தான் என்றால் பொய் நீங்காமல் மெய்யாகிய ஒளி தேகம் தோன்றாது. அதற்குத்தான் நெல்லில் உமி தவிடு வைத்ததுபோல், பொய்யையும் மெய்யையும் உடம்பில் சேர்த்து வைத்திருக்கிறான். உமி நீங்கினால் அரிசியாவதுபோல், பொய் உடம்பு நீங்கினால் மெய் உடம்பு வெளிப்படும். மெய் உடம்பு வெளிப்படுவதற்கு ஒரே வழி பசியாற்றி வைத்தலும், உருகி தியானிப்பதும்தான்.

குறிப்பு : 1. நெல்லில் உமி நீங்கினால் முளையாததுபோல, காமதேகம் நீங்கினால் பிறவி அற்றுப்போகும்.

2. பொய் உடம்பாகிய காமதேகம் நீங்குவதற்கு மெய் உடம்பாகிய ஒளிதேகம் பெற்ற ஆசான் அகத்தீசர் ஆசி இருக்க வேண்டும். மெய் உடம்பாகிய ஒளிதேகம் பெற்றவர்களுக்கு மரணமில்லாப் பெருவாழ்வு உண்டாகும். மேலும், ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்

ஆகிய ஐந்தொழிலும் செய்வார்கள். அவர்களே எல்லாம் வல்ல் பரப்பிரம்மம் ஆவார்கள்.

ஆசான் அகத்தீசரை பூஜிப்போம்,
ஆசிபெற்று இன்புற்று வாழ்வோம்.

## விடுபேறு

ஓங்காரக்குடிலாசான், பரமானந்த சதாசிவ சற்குரு
தவத்திரு. **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்**
அவர்களின் அருளுரை

மனிதனாகப் பிறந்தால் விடுபேறு அடைய முயற்சிக்க வேண்டும். விடுபேறு அடைய விரும்புகிறவர்களுக்கு குரு அருள் வேண்டும். குரு அருள் இல்லாமல் நாம் பெற்ற கல்வி துணைக்கொண்டு முயற்சித்தால், உண்மைப் பொருளை அறிய முடியாது. இதன் விபரம் தெரிந்தவர்கள், ஆசான் அகத்தீசரை எல்லாம் வல்ல பரப்பிரம்மமாகவும், நமக்கு பிறவிப் பிணியைத் தீர்க்கும் பேரமுதமாகவும் எண்ணி, அவர் திருவடியைப் பூஜித்தால், பிறந்தவர்கள் சவமாகப் (பிணமாக) போகக்கூடியவர்கள் சிவமாவார்கள். மேலும், தொடர்ந்து ஆசான் அகத்தீசரை பூஜை செய்து, இந்த இகலோகத்திலேயே பரலோகமாகிய சிவலோகம் சேர்வார்கள். மேலும் சலிப்பில்லாமல் பூஜை செய்து வந்தால் யாராலும் சென்று அணுகமுடியாத மோட்சகதி பெறுவார்கள்.

மேலும், தொடர்ந்து பூஜை செய்து வருகின்றவர்களுக்கு, ஆசான் அகத்தீசர் அகமும் புறமும் இருந்து, அஞ்சேல்! அஞ்சேல்! என்று அருளுவார். ஆசான் அகத்தீசர், மலமாயையையும், மனமாயையையும், பந்தபாசமும் அற்று எக்காலத்திலும் அழிவில்லாத பேராற்றல் பெற்ற

சிவபெருமான் ஆவார். அவரை எல்லாம் வல்ல சிவபெருமானாகவே எண்ணி, பூஜித்து வந்தால் காமத்தால் வரும் கேடுகள் பற்றியும், அநித்தியத்தை நித்தியம் என்று எண்ணுகின்ற மயக்கம் நீங்கியும் உண்மைப்பொருளை அறியலாம்.

காமத்தாலும், பேராசையாலும், பொறாமையாலும், ஜாதி வெறியாலும், மத வெறியாலும், யான் என்ற கர்வத்தாலும், உத்தியோகத் திமிராலும், ஆள் படையாலும், கல்வி கற்றோம் என்ற கர்வத்தாலும் செய்த பாவங்கள் அஞ்ஞானகாசமாகிய அறியாமையை உண்டுபண்ணும். அந்த அறியாமைதான் தொடர்ந்து வரும் பிறவிக்கு காரணமாகும்.

தினமும் ஆசான் அகத்தீசரை பூஜைசெய்தும், பசித்த ஏழைகளுக்கு அன்னதானமும் செய்து வந்தால் நாம் செய்த பாவங்கள் எல்லாம் நீங்கி சிறப்பறிவாகிய மெய்யுணர்வு உண்டாகும்.

சிறப்பறிவு இல்லாமல், மும்மலமாகிய பேதமையை நீக்க முடியாது. பேதமை நீங்கி வெற்றிபெற வேண்டும் என்றால், மும்மலமாகிய பேதமையற்ற ஆசான் அகத்தீசரை பூஜைசெய்து ஆசிபெற்றுக் கொள்வோம்.

குறிப்பு : 1. போலி ஆன்மீகவாதிகள் மனைவியோடு கூடாதே என்றும், விந்துவிடலாகாது என்றும் சொல்வார்கள். இவர்கள் இயற்கையின் இயல்பும், உடல்கூறும் அறியாதவர்கள் ஆவார்கள். மேலும், பந்தபாசம் கூடாது என்றும், உலகம் பொய் என்றும் சொல்லி நல்ல இல்லறத்தானை கெடுத்து, பணத்தையும் பறிப்பார்கள். இயற்கையின் அமைப்பே ஆணும் பெண்ணுமாக சேர்ந்தே படைத்துள்ளது. இதில் ஒன்றைவிட்டு ஒன்று ஞானம் பெற முடியாது. விந்துவைக் கட்டினால் உடம்பில் அசுத்தம் தங்கிவிடும். அதன் காரணமாக தலைவலி,

மலச்சிக்கல், மனஒருநிலைப்படாமை மேலும் இரத்த அழுத்தம் போன்ற கேடுகள் உண்டாகும். விசயம் தெரிந்தவர்கள், மனைவியை தெய்வமாக மதித்தும், பிள்ளைகளுக்கும் தாய்தந்தைக்கும் செய்யவேண்டிய கடமைகளைச் செய்தும், உடன்பிறந்தவர்கள், சுற்றத்தார், நண்பர்கள் இவர்களுக்குப் பாதுகாவலராக இருந்தும், ஆண் வாரிசு இல்லாத மாமன் – மாமி வசதியற்றவர்களாகவும், பாதுகாப்பு இல்லாதவர்களாகவும் இருந்தால் அவர்களை காப்பாற்றினால் ஆசான் அகத்தீசரின் ஆசி பெற வாய்ப்பு உண்டு. மேலும், விருந்தை உபசரித்தும், மேலும் வறியோர்களுக்குப் பசியாற்றியும், சிறந்த முயற்சி உள்ளவராக இருந்து, பொருளை ஈட்டியும், அந்தப் பொருளைக் கொண்டு நற்காரியங்கள் செய்தும், காலை 10 நிமிடமும், மாலையில் 10 நிமிடமும் ஒரு வெண்ணிறத்துணியில் அமர்ந்து **ஓம் அகத்தீசாய நம** என்று நாமஜெபம் செய்தும், பெறுதற்கரிய மானுடப் பிறவியைத் தக்கவாறு பயன்படுத்தி ஜென்மத்தைக் கடைத்தேற்றியம் கொள்வார்கள். இவர்கள் போலி ஆன்மீகவாதிகளை நம்பமாட்டார்கள்.

போலி ஆன்மீகவாதிகளோ, பெரிய மகான்களைப்போல் வேடம் தரித்து, நல்லதொரு இல்லறத்தானைக் கெடுத்துவிடுவார்கள். இவர்களைப் பார்ப்பதே குற்றமாகும். அவர் சொல்லைக் கேட்பது அதைவிடப் பாவமாகும். எனவே அவர்களிடம் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இதற்கெல்லாம் ஆசான் அகத்தீசரின் ஆசி வேண்டும். ஆசி இல்லாமல் இனம் கண்டுகொள்ள முடியாது.

குறிப்பு : 2. சிலர் குண்டலிசக்தி ஏற்றுவதாகச் சொல்லுவார்கள். அதை ஆன்மீகச்சான்றோர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். குண்டலிசக்தி என்பது

ஆசான் திருவருளால்தான் அறிய முடியும். ஆசான் அகத்தீசரின் ஆசிபெற்ற புண்ணியவான்களை யாரும் ஏமாற்ற முடியாது. எனவே, ஆசான் அகத்தீசரை பூஜிப்போம், ஆசி பெறுவோம், வெற்றி பெறுவோம்.

குறிப்பு : 3. மது அருந்துதல், பொல்லாத காமம், கொலை, புலால் உண்ணுதல், களவு, சூதாடுதல் போன்ற குற்றங்களை பூரணமாக நீக்கிய பின்தான் தியானம் செய்ய வேண்டும் என்றால், நூறுகோடி ஜென்மமும் போதாது. மேற்கண்ட குற்றங்கள் நம்மிடம் இருந்தாலும், புண்ணியவானாகிய ஆசான் அகத்தீசரை பூஜித்து வந்தால் எல்லா குணக்கேடுகளும் கதிர்கண்ட பனிபோல் விலகிவிடும். ஆசான் அகத்தீசரின் ஆசி இல்லாமல் குணக்கேடுகளைப்பற்றி அறியவோ, நீக்கவோ நம்மால் அணுஅளவும் முடியாது. ஆசான் அகத்தீசரின் திருவருளே – அஞ்ஞானகாசமாகிய அறியாமையை நீக்கி சிறப்பறிவை உண்டாக்கும். மேலும், தயை சிந்தையும், செல்வமும் பெருகும். நோயில்லா வாழ்வும், நீடிய ஆயுளும் உண்டாகும். ஞானமும் கைகூடும்.

குறிப்பு : 4. வருவாய்க்கு தக்க தன் வாழ்வை அமைத்துக்கொள்வதே சிறப்பறிவாகும். இதுவும் ஆசான் அகத்தீசரின் ஆசியால்தான் முடியும்.

குறிப்பு : 5. சிலர் மனம் ஒருநிலைப் படுத்துவதை தியானம் என்பார்கள். மனம் ஒருகாலத்திலும் ஒருநிலைப்படாது. மனமாயை அற்றவரும் சாந்தமே வடிவான ஆசான் அகத்தீசரை பூஜித்தால் அன்றி மனம் ஒருநிலைப்படாது. மனம் ஒருநிலைப்படுவதற்கு ஆசான் அகத்தீசரின் ஆசியால்தான் முடியும். ஆசான் அகத்தீசரை பூஜிப்போம், ஆசிபெற்று இன்புற்று வாழ்வோம்.

வேதம் என்பதே ஆசான் அகத்தீசரின் திருவடிதான் என்று அறிவதே சிறப்பறிவாகும்.

நாம் புண்ணியவான் ஆவதற்கு,

## ஆசான் இராமலிங்க சுவாமிகள்

அருளிய அருள் வாக்கு.

❋ நல்லோர் மனத்தை நடுங்கச் செய்தேனோ!
❋ நட்டாற்றில் கையை நழுவ விட்டேனோ!
❋ வலிய வழக்கிட்டு மானங் கெடுத்தேனோ!
❋ வரவுபோக் கொழிய வழியடைத்தேனோ!
❋ தானங் கொடுப்போரைத் தடுத்து நின்றேனோ!
❋ தருமம் பாராது தண்டஞ் செய்தேனோ!
❋ கலந்த சிநேகரைக் கலகஞ் செய்தேனோ!
❋ களவு செய்வோர்க்கு உளவு சொன்னேனோ!
❋ மனமொத்த நட்புக்கு வஞ்சகஞ் செய்தேனோ!
❋ மண்ணோரம் பேசி வாழ்வழித் தேனோ!
❋ குடிவரி உயர்த்திக் கொள்ளை கொண்டேனோ!
❋ குடிக்கின்ற நீருள்ள குளத்தைத் தூர்த்தேனோ!
❋ ஏழைகள் வயிறு எரியச் செய்தேனோ!
❋ இரப்போர்க்குப் பிச்சை இல்லை யென்றேனோ!
❋ உயிர்க்கொலை செய்வோர்க்கு உபகாரஞ் செய்தேனோ!
❋ ஊன்சுவை யுண்டு உடல்வளர்த் தேனோ!
❋ பொருளை இச்சித்துப் பொய்சொன் னேனோ!
❋ பொதுமண்டபத்தைப் போயிடித் தேனோ!
❋ ஆசை காட்டி மோசஞ் செய்தேனோ!
❋ அன்புடை யவர்க்குத் துன்பஞ் செய்தேனோ!
❋ வேலை யிட்டுக்கூலி குறைத்தேனோ!
❋ வெய்யிலுக் கொதுங்கும் விருக்ஷ மழித்தேனோ!
❋ பசித்தோர் முகத்தைப் பாராதிருந் தேனோ!
❋ பகைகொண்டு அயலோர் பயிரழித் தேனோ!
❋ கோள் சொல்லிக் குடும்பங் கலைத்தேனோ!
❋ கலங்கி ஒளிந்தோரைக் காட்டிக் கொடுத்தேனோ!
❋ கற்பழிந் தவளைக் கலந்திருந் தேனோ!

❋ கணவன்பற்றி நிற்போரைக் கற்பழித் தேனோ!
❋ காவல் கொண்டிழுந்த கன்னியை அழித்தேனோ!
❋ கருப்ப மழித்துக் களித்திருந் தேனோ!
❋ கற்றவர் தம்மைக் கடுகடுத் தேனோ!
❋ கன்றுக்குப் பாலூட்டாது கட்டி வைத் தேனோ!
❋ குருவை காணிக்கை கொடுக்க மறந்தேனோ!
❋ குருவின் கூண்டில் பதைக்க அடைத்தேனோ!
❋ பெரியோர் பாட்டிற் பிழைசொன் னேனோ!
❋ கல்லும் நெல்லும் கலந்து விற்றேனோ!
❋ தவஞ்செய் வோரைத் தாழ்வு சொன்னேனோ!
❋ ஆலயக் கதவை அடைத்து வைத்தேனோ!
❋ சிவனடி யாரைச் சீறி வைதேனோ!
❋ சுத்த ஞானிகளைத் தூஷணஞ் செய்தேனோ!
❋ மாதா பிதாவை வைது நின்றேனோ!
❋ தந்தை தாய்மொழியைத் தள்ளி நடந்தேனோ!
❋ தெய்வத்தை இகழ்ந்து செருக்கடைந் தேனோ!

என்ன பாவம் செய்தேனோ! இன்னதென் றறியேனே!

ஓங்காரக்குடிலாசான், பரமானந்த சதாசிவ சற்குரு

தவத்திரு. **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்**

அவர்கள் அருளிய

## புண்ணிய செயல்களின் விவரம்

★ தாய்–தந்தை செய்த உதவிகளை நன்றி மறவாது அவர்களிடம் அன்புடன் நடந்து கொள்வதே புண்ணியமாகும்.

★ மனைவி அறிந்தோ அறியாமலே குற்றம் செய்தால் அதை மன்னித்து மறப்பது புண்ணியமாகும்.

★ ஒருவரிடம் வேலை வாங்கும் பொழுது அவர்களின் உழைப்புக்கேற்ற ஊதியம் தருவதும் புண்ணியமாகும்.

★ உற்ற நண்பர்களுக்கு துன்பம் வந்த காலத்தில் உதவி செய்வது புண்ணியமாகும். விருந்தை உபசரித்து

அவர்கள் மனம் மகிழும்படி நடந்து கொள்வதும் புண்ணியமாகும்.

- ★ நமக்கு மனது சோர்வு இருந்தாலும், நம்மை நோக்கி வரும் அன்பர்களிடம் இனிமையாக பேசுவதும் புண்ணியமாகும்.
- ★ வரவுக்கு உட்பட்டு செலவு செய்ய வேண்டுமென்ற எண்ணமும் புண்ணியமாகும்.
- ★ ஜாதி துவேசம், மத துவேசம், மொழி துவேசம் பார்க்காமல் எல்லோரும் கடவுளின் பிள்ளைகள் என்று எண்ணி அன்பு காட்டுவது புண்ணியமாகும்.
- ★ நாம் பேசும்பொழுது நமது பேச்சால் மற்றவர்கள் மனம் புண்படாது இருக்க வேண்டுமென்று நினைப்பது புண்ணியமாகும்.
- ★ நம்மீது பகை கொண்டவர்கள் நம்மிடம் வரும்பொழுது நாம் பகை உணர்வை வெளிப்படுத்தாது இனிமையாக பேசுவது புண்ணியமாகும்.
- ★ எப்பொழுதும் உடன்பாடு உள்ளவர்களிடம் மனம்விட்டு பேசுவது எல்லோருக்கும் இயல்புதான். நம்மிடம் முரண்பாடு உள்ளவர்களிடம் மனம்விட்டு பேசி பகைமையை நீக்கிக்கொள்வது புண்ணியமாகும்.
- ★ புண்ணியவானாகிய ஆசான் அகத்தீசரை தினமும் பூஜித்து வருவதும் புண்ணியமாகும். இயற்கை அன்னை நமக்கு தானியங்களையும், காய்கறிகளையும், கீரை வகைகளையும், பல்வேறு கனிகளையும் கொடுத்திருக்கின்றாள். இந்த உணவுகளை போதாது என்று மற்ற உயிர்களை கொன்று அந்த உடம்பை உண்ணாதிருப்பது புண்ணியமாகும். நம்மிடம் இருக்கக்கூடிய அறிவே தெளிவில்லாமல் இருப்பதால் மேலும் போதை பொருட்களும் மற்றும் மதுபானம் அருந்தி அறிவை மாசுபடுத்திக்கொள்ளாதிருப்பதும் புண்ணியமாகும்.
- ★ வருகின்ற செய்திதாள்களில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தற்கொலை போன்ற செய்திகள் மிகுதியாக

வருவதால் அதைப் படித்தால் மனம் அமைதி கெடும். எனவே, அதைப் படிக்காதிருப்பது புண்ணியமாகும்.

★ ஒருசிலர் குளிக்கும்போதோ அல்லது படுக்கும்போழுதோ தங்கச்சங்கிலி, கைக்கடிகாரம், மோதிரம் ஆகியவைகளை எப்பொழுதும் வைக்கவேண்டிய இடத்தில் வைக்காமல் மாற்றி வைத்துவிட்டு மற்றவர்கள்மேல் பழிசுமத்துவார்கள். மேலும், தம் வீட்டில் பொருள் காணாமல்போனால் சம்மந்தம் இல்லாதவர்கள்மேல் சந்தேகப்படுவார்கள். மேலும், காவல்துறையில் புகார் கொடுப்பார்கள். எதையும் நிதானித்து முடிவெடுப்பதே புண்ணியமாகும்.

★ அறப்பணி செய்வோருக்கு வீடு அவசியம்தான். அதற்காக பெரிய வீடாக கட்டி ஆடம்பரமாக வாழ வேண்டும் என்று நினைக்காமல் இருப்பதும் புண்ணியமாகும்.

★ திருக்குறள், திருமந்திரம், திருஅருட்பா, திருவாசகம் போன்ற அறநூல்களை பயபக்தியுடன் தொடுவதும், படிப்பதும் புண்ணியமாகும்.

★ சாலையில் செல்லும் காலத்தில் ஆணி, உடைந்த கண்ணாடிகள், கற்கள், முட்கள், வாழைப்பழத்தோல் போன்றவை கிடக்கும். இதை அப்புறப்படுத்துவதும் புண்ணியமாகும்.

★ கண்ட இடங்களில் சுகாதாரகேடு வரும்படி அசுத்தம் செய்யாதிருப்பதும் புண்ணியமாகும்.

★ வாரம் ஒருநாள் ஆசான் அகத்தீசர் ஆசி பெறுவதற்காக காலையிலும் மாலையிலும் உணவு உண்ணாத மதியம் ஒருவேளை மட்டும் உணவு உண்ணுவது புண்ணியமாகும்.

★ எல்லாம்வல்ல பரப்பிரம்மமாகிய மெய்ப் பொருளை அறியாத மூடர்களை காணாதிருப்பதும் புண்ணியமாகும்.

★ மெய்ப்பொருளை கற்றுணர்ந்த ஞானிகளுக்கு தொண்டு செய்து ஆசி பெறுவது புண்ணியமாகும்.

★ பிறப்பென்னும் பேதமை நீங்க சிறப்பென்னும் செம்பொருள் காண்பது புண்ணியமாகும்.

★ பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொற்கள் ஆகிய நான்கு தீமைகள் நீங்கி வாழ்வது புண்ணியமாகும்.

★ பொருளின் இயல்பே நிலையில்லாதது என்று அறிந்து பொருள் இருக்கும்பொழுதே அறப்பணி செய்து ஜென்மத்தைக் கடைத்தேற்றிக்கொள்வது புண்ணியமாகும்.

★ நாம் காணுகின்ற அத்தனையும் அழியக்கூடியது என்று அறிந்து அதை கண்டு மயங்காது தெளிவடைவது புண்ணியமாகும்.

★ நாம் காணுகின்ற பொருள்களில் உண்மையும் உண்டு. பொய்யும் உண்டு. அதில் உண்மையை மட்டும் காண்பது புண்ணியமாகும்.

★ இந்த உடம்பு பொய்தான். அதில் உண்மைப்பொருள் இருப்பது அறிவு அறிந்து அந்த உண்மைப்பொருள் தாம் ஆகிவிடுவது புண்ணியமாகும்.

★ ஆன்மநாட்டம் உள்ளவர்கள் உண்மை உணர்ந்த ஆசானை தேடி அலைவார்கள். அவர்களுக்கு உண்மை பொருள் உணர்ந்த ஆசான் கிடைத்தால் அதுவும் புண்ணியமாகும்.

★ சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக தீயநட்போடு சேர்ந்திருந்தாலும் அந்த நட்பு நம்மைவிட்டு நீங்கிவிடுவது புண்ணியமாகும்.

★ குடிப்பழக்கம், சூதாடும் பழக்கம் போன்ற பழக்கங்களிலிருந்து விடுபடுவதும் புண்ணியமாகும்.

★ சில பெண்கள் இளம் வயதிலேயே விதவையாகிவிடுவார்கள். அவர்கள் விரும்பினால் மறுமணம் செய்துவைப்பது புண்ணியமாகும்.

★ வியாபாரம் செய்யும்பொழுது நாம் விற்கக்கூடிய பொருட்களை நியாயமான விலைக்கு விற்பது புண்ணியமாகும்.

★ செத்துபிறக்கின்றவர்களை சமாதி வைத்து அதை பூஜை செய்யாதிருப்பதும் புண்ணியமாகும்.

★ நமக்கு தக்கசமயத்தில் உதவி செய்தவர்களை சாகும்வரை மறவாதிருப்பதும் புண்ணியமாகும்.

★ உண்மை பொருளறிந்த ஆசானுக்கு பண்புள்ள சீடன் அமைந்தால் அதுவும் புண்ணியமாகும்.

★ தகுதியுள்ள நண்பர்கள் சிலசமயத்தில் அறியாமையால் குற்றம் செய்தாலும் அதை அனுசரித்து நடப்பதும் புண்ணியமாகும்.

★ நமது செயல்பாடுகள் மற்ற உயிர்கள் மகிழ்ச்சியடையும்படி இருந்தால் அதுவும் புண்ணியமாகும்.

★ நமக்கு துன்பம் வந்த காலத்தில் கடன் கொடுத்து உதவி செய்தவர்களுக்கு நாம் பெற்றகடனை திரும்ப கொடுத்துவிடுவது புண்ணியமாகும்.

★ நமக்கு வீடு இல்லாத காலத்திலும், வியாபாரத்திற்கு கடை இல்லாத காலத்திலும் வாடகைக்கு வீடும் கடையும் கொடுத்து உதவியவர்களுக்கு அவர்களுக்கு தேவையான காலத்தில் கடை மற்றும் வீட்டை காலி செய்து கொடுப்பதும் புண்ணியமாகும்.

★ நமது வீட்டில் டேப்ரெக்கார்டர், ரேடியோ, டி.வி பயன்படுத்தும் காலத்தில் அக்கம்பக்கம் உள்ளவர்கள் சத்தம் அதிகம் என்று சொன்னால், சத்தத்தை குறைத்து வைத்துக்கொள்வது புண்ணியமாகும்.

★ நாம் பேருந்தில் செல்லும் காலத்தில் கர்ப்பஸ்திரிகள், கையில் குழந்தையோடு நின்று பயணம் செய்கின்றவர்களுக்கு நாம் அமர்ந்திருக்கும் இடத்தை விட்டுக்கொடுப்பது புண்ணியமாகும்.

★ நமது வீட்டில் உள்ள பசு அல்லது எருமை பால்கறக்கும் முன்னர் கன்றுக்கு பால்விட வேண்டும் என்று நினைப்பது புண்ணியமாகும்.

★ தாய்ப்பால் இல்லா குழந்தைகளுக்கு பசும்பாலே தாய்ப்பால்போல் பாதுகாப்பதால் நாம் பசுவை பாதுகாப்பது புண்ணியமாகும்.

★ கடவுளால் படைக்கப்பட்ட ஆடு, மாடு, கோழி மற்றும் ஜீவராசிகளை கடவுளுக்கே வெட்டி பலி கொடுப்பது பாவமாகும். அதுபோன்ற காரியங்கள் செய்யாதிருப்பது புண்ணியமாகும்.

★ நாம் கற்றறிந்த உண்மையை மற்றவர்களுக்கு மனதில் பதியுமாறு சொல்வதும் புண்ணியமாகும்.

★ நாம் அனுபவிக்கக்கூடிய இன்பங்கள் அனைத்தும் பிறரால் பழிக்கப்படாதிருப்பது புண்ணியமாகும்.

★ ஆசான் சுப்ரமண்யர் மேல் பக்தி கொண்டவர்களுக்கும், சமூக சான்றோர்களுக்கும் உதவி செய்வது புண்ணியமாகும்.

★ உணவுப் பொருட்களில் கலப்படம் செய்வது பாவமாகும், கலப்படம் செய்யாதிருப்பது புண்ணியமாகும்.

★ சில பெண்கள் இளம் வயதிலேயே விதவையாகிவிடுவார்கள். அவர்களை சுபகாரியங்களில் கலந்துகொள்ளக்கூடாது என்றும், சுபகாரியங்களுக்குச் செல்லும் காலத்தில் அவர்கள் எதிரே வரக்கூடாது என்றும், அப்படி வந்தால் சுபகாரியங்கள் தடைபடும் என்றும் சொல்வது கருணை இல்லாத செயல்களாகும். அவ்வாறு அவர்கள் மனம் புண்படும்படி பேசாதிருப்பது புண்ணியமாகும்.

★ உண்மைப்பொருள் உணர்ந்த ஆசான் நமக்கு மனமுவந்து உபதேசித்தால் அது அளவில்லா புண்ணியமாகும்.

★ மனிதன் மீண்டும் மீண்டும் பிறப்பதற்கு காரணம் மும்மலமாகிய களிம்புதான். களிம்பு அற பாடுபடுவது புண்ணியமாகும்.

★ கடவுளால் செய்யப்பட்ட திருக்குறளை தொட்டு வணங்குவதும், படிப்பதும், அதை பரப்புவதும் புண்ணியமாகும்.

★ குடும்பத் தலைவன் தன் மனைவியின் தாய், தந்தையாகிய மாமன், மாமிக்கு பாதுகாவலராக இருப்பது புண்ணியமாகும். அதே போல குடும்பத்

தலைவி தன் கணவனுடைய தாய், தந்தையாகிய மாமன், மாமி மகிழும்படி நடந்துகொள்வது புண்ணியமாகும்.

★ ஆண்களை படைத்த அதே கடவுள்தான் பெண்களையும் படைத்திருக்கிறான். பெண்களை மதித்து நடப்பதே புண்ணியமாகும்.

★ மனித வர்க்கம் அத்தனையும், கடவுளால் படைக்கப்பட்டதாகும். எனவே, உள்ளும், புறமும், வேற்றுமையில்லாமல் சமமாக மதிப்பவர்கள் மனிதர்களில் தெய்வம் ஆவார்கள். அவர்களை கண்டு தரிசிப்பதே புண்ணியமாகும்.

மேற்கண்ட அனைத்து புண்ணிய செயல்களுக்கும் ஆசான் அகத்தீசர் ஆசி இருக்க வேண்டும்.

**ஆகவே, ஆசான் அகத்தீசரை பூஜிப்போம், ஆசிபெற்று இன்புற்று வாழ்வோம்.**

## ஆத்திசூடி

ஞானக்கடல் ஔவையார்

**ஆத்தி சூடி அமர்ந்த தேவனை**
**ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.**

அறம்செய விரும்பு
ஆறுவது சினம்
இயல்வது கரவேல்
ஈவது விலக்கேல்
உடையது விளம்பேல்
ஊக்கமது கைவிடேல்
எண் எழுத்து இகழேல்
ஏற்பது இகழ்ச்சி
ஐயம் இட்டு உண்
ஒப்புரவு ஒழுகு
ஓதுவது ஒழியேல்
ஔவியம் பேசேல்

அஃகம் சுருக்கேல்
கண்டு ஒன்று சொல்லேல்
ஙப்போல் வளை
சனி நீர் ஆடு
ஞயம்பட உரை
இடம்பர வீடு எடேல்
இணக்கம் அறிந்து இணங்கு
தந்தை தாய்ப் பேண்
நன்றி மறவேல்
பருவத்தே பயிர் செய்
மண்பறித்து உண்ணேல்
இயல்பலாதன செயேல்
அரவம் ஆட்டேல்
இலவம் பஞ்சில் துயில்
வஞ்சகம் பேசேல்
அழகு அலாதன செயேல்
இளமையில் கல்
அறனை மறவேல்
அனந்தல் ஆடேல்
கடிவது மற
காப்பது விரதம்
கிழமைப்பட வாழ்
கீழ்மை அகற்று
குணமது கைவிடேல்
கூடிப் பிரியேல்
கெடுப்பது ஒழி
கேள்வி முயல்
கைவினை கரவேல்
கொள்ளை விரும்பேல்
கோதாட்டு ஒழி
கௌவை அகற்று
சக்கர நெறி நில்
சான்றோர் இனத்து இரு

சித்திரம் பேசேல்
சீர்மை மறவேல்
சுளிக்கச் சொல்லேல்
சூது விரும்பேல்
செய்வன் திருந்தச் செய்
சேர் இடம் அறிந்து சேர்
சை எனத் திரியேல்
சொல் சோர்வு படேல்
சோம்பித் திரியேல்
தக்கோன் எனத் திரி
தானமது விரும்பு
திருமாலுக்கு அடிமை செய்
தீவினை அகற்று
துன்பத்திற்கு இடம் கொடேல்
தூக்கி வினை செய்
தெய்வம் இகழேல்
தேசத்தோடு ஒத்துவாழ்
தையல் சொல் கேளேல்
தொன்மை மறவேல்
தோற்பன தொடரேல்
நன்மை கடைப்பிடி
நாடு ஒப்பன செய்
நிலையில் திரியேல்
நீர் விளையாடேல்
நுண்மை நுகரேல்
நூல் பல கல்
நெற் பயிர் விளை
நேர்பட ஒழுகு
நைவினை நணுகேல்
நொய்ய உரையேல்
நோய்க்கு இடம் கொடேல்
பழிப்பன பகரேல்
பாம்பொடு பழகேல்

பிழைபடச் சொல்லேல்
பீடு பெற நில்
புகழ்ந்தாரைப் போற்றி வாழ்
பூமி திருத்தி உண்
பெரியாரைத் துணைக்கொள்
பேதைமை அகற்று
பையலோடு இணங்கோல்
பொருள்தனைப் போற்றி வாழ்
போர்த் தொழில் புரியேல்
மனம் தடுமாறேல்
மாற்றானுக்கு இடம் கொடேல்
மிகைபடச் சொல்லேல்
மீதூண் விரும்பேல்
முனைமுகத்து நில்லேல்
மூர்க்கரோடு இணங்கேல்
மெலின் நல்லாள் தோள் சேர்
மேன்மக்கள் சொல் கேள்
மைவிழியார் மனை அகல்
மொழிவது அறமொழி
மோகத்தை முனி
வல்லமை பேசேல்
வாது முற்கூறேல்
வித்தை விரும்பு
வீடு பெற நில்
உத்தமனாய் இரு
ஊருடன் கூடி வாழ்
வெட்டெனப் பேசேல்
வேண்டி வினை செயேல்
வைகறைத் துயில்எழு
ஒன்னாரைத் தேறேல்
ஓரம் சொல்லேல்

# கொன்றை வேந்தன்

ஞானக்கடல் ஔவையார்

**கொன்றை வேந்தன் செல்வன் அடியினை**
**என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே.**

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
இல்லறம் அல்லது நல்லறம் அன்று.
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு.
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்.
ஏவா மக்கள் மூவா மருந்து.
ஐயம் புகினும் செய்வன செய்.
ஒருவனைப் பற்றி ஓர் அகத்து இரு.
ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்.
ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.
அஃகமும் காசும் சிக்கெனத் தேடு.
கற்பு எனப்படுவது சொல் திறம்பாமை.
காவல்தானெ பாவையர்க்கு அழகு.
கிட்டாது ஆயின் வெட்டென மற.
கீழ்ோர் ஆயினும் தாழ உரை.
குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.
கூர் அம்பு ஆயினும் வீரியம் பேசேல்.
கெடுவது செய்யின் விடுவது கருமம்.
கேட்டில் உறுதி கூட்டும் உடைமை.
கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.
கொற்றவன் அறிதல் உற்றிடத்து உதவி.
கோட்சேவிக் குறளை காற்றுடன் நெருப்பு.
கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை.
சந்ததிக்கு அழகு வந்தி செய்யாமை.
சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு.

சிவத்தைப் பேணின் தவத்திற்கு அழகு.
சீரைத் தேடின் ஏரைத் தேடு.
சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்.
சூதும் வாதும் வேதனை செய்யும்.
செய்தவம் மறந்தால் கைதவம் ஆளும்.
சேமம் புகினும் யாமத்து உறங்கு.
சையத்திருந்தால் ஐயம் இட்டு உண்.
சொக்கர் என்பவர் அத்தம் பெறுவர்.
சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.
தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.
தாயின் சிறந்த ஒரு கோயிலும் இல்லை.
திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
தீராக் கோபம் போராய் முடியும்.
துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு.
தூற்றும் பெண்டிர் கூற்று எனத் தகுவர்.
தெய்வம் சீறின் கைதவம் ஆளும்.
தேடாது அழிக்கின் பாடாய் முடியும்.
தையும் மாசியும் வையகத்து உறங்கு.
தொழுது ஊண் சுவையின் உழுது ஊண் இனிது.
தோழனோடும் ஏழைமை பேசேல்.
நல் இணக்கம் அல்லது அல்லல் படுத்தும்.
நாடு எங்கும் வாழக்கேடு ஒன்றும் இல்லை.
நிற்கக் கற்றல் சொல் திறம்பாமை.
நீர் அகம் பொருந்திய ஊரகத்து இரு.
நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
நூல்முறை தெரிந்து சீலத்து ஒழுகு.
நெஞ்சை ஒளித்து ஒரு வஞ்சகம் இல்லை.
நேரா நோன்பு சீராகாது.
நைபவர் எனினும் நொய்ய உரையேல்.
நொய்யவர் என்பவர் வெய்யவர் ஆவர்.
நோன்பு என்பதுவே கொன்று தின்னாமை.
பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்.
பாலோடு ஆயினும் காலம் அறிந்து உண்.

பிறன் மனை புகாமை அறம் எனத்தகும்.
பீரம் பேணி பாரம் தாங்கும்.
புலையும் கொலையும் களவும் தவிர்.
பூரியோர்க்கில்லை இல்லை சீரிய ஒழுக்கம்.
பெறியோர்க்கில்லை சுற்றமும் சினமும்.
பேதைமை என்பது மாதர்க்கு அணிகலம்.
பையச் சென்றால் வையம் தாங்கும்.
பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர்.
போனகம் என்பத தான் உழந்து உண்டல்.
மருந்தே ஆயினும் விருந்தோடு உண்.
மாரி அல்லது காரியம் இல்லை.
மின்னுக்கு எல்லாம் பின்னுக்கு மழை.
மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது.
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
மூத்தோர் சொல்லும் வார்த்தை அமிர்தம்.
மெத்தையல் படுத்தல் நித்திரைக்கு அழகு.
மேழிச் செல்வம் கோழை படாது.
மைவிழியார் தம்மனை அகன்று ஒழுகு.
மொழிவது மறுக்கின் அழிவது கருமம்.
மோனம் என்பது ஞான வரம்பு.
வளவன் ஆயினும் அளவு அறிந்து அழித்து உண்.
வானம் சுருங்கின் தானம் சுருங்கும்.
விருந்து இல்லோர்க்கு இல்லை பொருந்திய ஒழுக்கம்.
வீரன் கேண்மை கூர் அம்பு ஆகும்.
உரவோர் என்கை இரவாது இருத்தல்.
ஊக்கம் உடமை ஆக்கத்திற்கு அழகு.
வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை.
வேந்தன் சீறின் ஆம்துணை இல்லை.
வையம் தோறும் தெய்வம் தொழு.
ஒத்த இடத்து நித்திரை கொள்.
ஓதாதார்க்கு இல்லை உணர்வொடும் ஒழுக்கம்.

## ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்தின் பிறவெளியீடுகள்

01. சித்தர்கள் போற்றித்தொகுப்பு.
02. ஞானிகள் அருளிய தினசரி பாராயண நூல்.
03. அனுபவ விளக்கப் பத்திரிக்கைகள்.
04. ஞானிகள் அருளிய குருநாதரின் பூர்வஜென்ம வரலாறு.
05. பிரம்மமுனிவர் அருளிய கலிகால மாற்றங்கள்.
06. மகான் மாணிக்கவாசகர் அருளிய தவநூல்.
07. பசுவுதை செய்தால் பருவமழை தவறும்.
08. சுகமான வாசியே அகத்தீசராகும்.
09. சன்மார்க்க நெறிமுறைத் திருமண விளக்கம்.
10. துன்பங்கள் தீர ஓங்காரக்குடிலுக்கு வாருங்கள்.
11. குருநாதர் அவர்களின் ஆன்மீகச் சொற்பொழிவு ஆடியோ, விடியோ, CD கேசட்டுகள்.
12. ஞானிகள் திருவுருப்படங்கள்.

**ஓம் அகத்தீசாய நம**
**ஓம் நந்தீசாய நம**
**ஓம் திருமூலதேவாய நம**
**ஓம் கருவூர் தேவாய நம**
**ஓம் இராமலிங்க தேவாய நம**

மேற்கண்ட 5 மகான்களின் நாமத்தை காலை 5 நிமிடமும் மாலை 5 நிமிடமும் நாமஜெபம் செய்துவந்தால், அருளாசி பெற்று, நாம் செய்த பாவங்கள் நீங்கி, உடல் ஆரோக்கியத்துடன், வறுமையில்லா வாழ்வு வாழலாம்.

எனவே ஞானிகளை பூஜிப்போம், இல்லறமும், ஞானமும்
பெற்று இன்புற்று வாழ்வோம்!!

மகத்துவம் பொருந்திய மகானும் மாமேருவெனத் திகழும்
மாமுனிவர் அகத்தீசரை தினமும் காலை, மாலை

சலிப்பில்லாமல் பூஜித்து வந்தால் நாம் அறியாமையால் செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கி, நாம் மேற்கொள்ளும் அனைத்து செயல்களும் சித்தி பெறும். மேலும் இல்லறமும் சிறக்கும், ஞானமும் கைகூடும் என்பது சத்தியம். இந்தநூல் சிறிய நூல் என்றாலும் மதிப்பிற்குரிய நூலாகும். இந்நூல் வீட்டில் இருப்பது கடவுள் இருப்பதாக எண்ணவேண்டும்.